MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Lord Shiva in Purananuru

M. Thenmozhi

Guest Lecturer, Government Arts and Science College, Senthamangalam, India

Manuscript ID : **MT127A0065**

Volume : **2**

Issue : **3**

Month : **September**

Year : **2022**

Received: 21.09.2022
Revised: 23.09.2022
Accepted: 25.09.2022
Published: 30.09.2022

Pages : 155-160

DOI: 10.5281/zenodo.7372030

ABSTRACT:

The full primordial god Shiva's name as Shivaperuman is not found in the Sangam literature. But there are many other names that can refer to Lord Shiva such as Mazhuval Nedion, Nankatha Muthuvan, Neelkandan etc. Among them, eight books are about Lord Shiva in Puranahundu, known as the Tamil Treasury. Also, many serials like Tripuram Eritavan, Neelnimir Sadayan, Kukumidathan, Pirainutula Bolintha Senni, Mukkan Selvan, Neelmani Midatan etc. are meant to refer to Shiva. Thus, Purana Hundred has explored in detail the fact that Lord Shiva has ruled under various names denoting his origin, even if not as Lord Shiva.

KEYWORDS:

Purananuru, Shiva, Thiru Neelasadai, Neelakandan

புறநானூற்றில் சிவன்

மு. தேன்மொழி,
கௌவுரவ விரிவுரையாளர்,
தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேந்தமங்கலம், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

முழு முதற் கடவுளான சிவனின் பெயர் சிவபெருமான் என்று சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. ஆனால் சிவபெருமானைக் குறிக்கக் கூடிய பெயர்களான மழுவாள் நெடியோன், நான்மறை முதல்வன், நீலகண்டன் போன்ற பல பெயர்கள் காணப்படுகின்றன. அவற்றுள் எட்டுத்தொகை நூல்களுள் தமிழ் கருவூலம் என்று அழைக்கப்படும் புறநானூற்றில் கடவுள் வாழ்த்து சிவனை பற்றியதாக உள்ளது. மேலும் திரிபுரம் எரித்தவன், நீள்நிமிர் சடையன், கறைமிடற்றன், பிறைநுதல் பொலிந்த சென்னி, முக்கண் செல்வன், நீலமணி மிடற்றன் போன்ற பல தொடர்கள் சிவனை குறிப்பதற்காகவே அமைகின்றன. எனவே சிவன், சிவபெருமான் என்ற பெயரில் இல்லையாயினும் அவனின் தோற்றத்தைக் குறிக்கும் பல்வேறு பெயர்களில் ஆட்சி செய்துள்ளதை புறநானூற்றின் வழி விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

கருச்சொற்கள்

புறநானூறு, சிவன், திருச்சடை, நீலகண்டன்

முன்னுரை

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழ்களின் உலகியல் வாழ்க்கை பற்றி உண்மைகளை உலகிற்கு உணர்த்தும் நூல்களில் ஒன்று புறநானூறு இப்புறநானூறு பண்டைய கால மக்களின் போர், வீரம், ஒழுக்கம், அரசியல், பண்பாடு போன்ற பலவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளன என்றால் மிகையாகாது. மன்னர் மற்றும் மக்களையும் ஆட்சி செய்யும் முழு முதற் கடவுளான சிவன் பற்றிய பதிவுப் புறநானூற்றில் உள்ளதா? என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிவன்

இந்து சமயத்தில் கூறப்பட்டுள்ள மும்மூர்த்திகளுள் ஒருவராகவும், சைவ சமயத்தின் முழுமுதல் கடவுளாகப் பிறப்பும், இறப்பும் இல்லாத பரம் பொருளாக இருப்பதால் பரமசிவன் என்றும் அழைக்கப்படுகின்றார். சிவன் என்பதற்கு **"மும்மூர்த்திகளுள் ஒருவரான சங்கார கடவுள், ஆக்கல், காத்தல், மறைத்தல், அருளல்**

மற்றும் அழித்தல் ஆகிய ஐவகைத் தொழிலையும் செய்பவன்” (http://ta.m.wiktionary.org) என்று தமிழ் விக்சனரி பொருள் கூறுகிறது.

கடவுள் வாழ்த்து

முழுமுதற் கடவுளான சிவபெருமான் எல்லா உயிர்களுக்கும் காவலாக விளங்குபவன் நீர் குறைவுபடாத கரகத்தையும் தாழ்ந்த சடையையும் கொன்றை மாலையும் அணிதவன் என்று கடவுள் வாழ்த்தாக சிவபெருமானை பெருந்தேவனார்

‘எல்லா உயிர்க்கும் ஏமம் ஆகிய
நீர் அறவு அறியாக் கரகத்து
தாழ்சடைப் பொலிந்த, அருந் தவத்தோற்கே’ - புறம்.பா.1

என்ற பாடல் அடிகளில் குறிப்பிட்டுள்ளார்.

திருபுரம் எரித்தது

இரும்பு, பொன், வெள்ளி ஆகியவற்றால் செய்யப்பெற்ற கோட்டைக்குள் இருந்து உயிர்களுக்கு தீங்கு விளைவித்த அரக்கர்களை கொன்று நாட்டை காப்பாற்றியவர் என்கிற புராண கதைகளுக்கு சான்றாக,

‘ஓங்குமலைப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல்’ - புறம். பா.55

இப்புறநானூற்றுப் பாடல் அமைகிறது. இப்பாடலை ஆராயும் போது உயர்ந்த மலையாகிய பெரிய வில்லில் பாம்பினை நாணாகக் கொண்டு ஒரே அம்பினால் மூன்று பதில்களை அழித்த செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. இச்செய்தியை,

“ஈரம்பு கண்டிலம் ஏகப்பர் தற்கையில்
ஓரம்பே முப்பரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை உந்தீபற”
(கந்தசாமிப் பிள்ளை(ப.ஆ), திருவாசகம், திருவந்தியார், பா.எ.2)

என்று வரும் திருவாசகத்தில் மாணக்கவாசகர் குறிப்பிட்டுள்ளார்.

தொன்மை

சிவபெருமான் முன்னை பழம் பொருள்களுக்கெல்லாம் பழம் பொருளானவன் என்பதை,

'முது முதல்வன் வாய் போகாது' - புறம்.பா.166

என்ற புறநானூற்று வரி விளக்குகிறது.

சிவனின் திருச்சடை

சிவபெருமானின் திருச்சடை மிகவும் வனப்புடையதாகவும் மிக நீண்டதாகவும் உள்ளதால்தான் இவ்விறைவனுக்கு சடையன் என்ற பெயர் வந்திருக்குமோ என்ற எண்ணத் தோன்றுகிறது. இதற்கு சான்றாக,

'ஏற்று வலன் உயரிய எரிமருள் அவிர் சடை' - புறம்.56

'நன்று ஆய்ந்த நீள் நிமிர் சடை' - புறம்.66

என்ற புறநானூற்று வரிகள் அமைகின்றன. இவரிகளில் மூலம் சிவபெருமானின் சடை முடியானது தீயை ஒத்து இருந்ததாகவும், நீண்ட சடையை கொண்டிருந்ததாகவும் அறிய முடிகிறது.

பிறை

சிவனின் அடையாளங்களுள் ஒன்று பிறைநிலா, என்பது நாம் அனைவரும் அறிந்ததே. சிவபெருமானுக்கு பிறைச் சந்திரன் ஆபரணமாக வந்ததற்கு காரணமாக, "தக்கனின் மகளிர் இருபத்தெழுவரையும் சந்திரன் மணந்தான் என்றும், அம்மகளிர் அனைவரையும் ஒப்பக்கருதி வாழாமையின், தக்கனால் சாபம் பெற்றான் என்றும், அச்சாபத்தால் தான் முழுமையாக அழிந்துபடாது இருக்கச் சிவபெருமானைச் சார்ந்தனன் என்றும் சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதலின் கலை குறைந்த சந்திரனை இறைவன் ஏற்றருளினான்" (தருமை ஆதீனக் குரு முதல்வர், சங்க இலக்கியங்களில் சமய நோக்கு, ப.எ.354.) என்றும் புராணங்கள் கூறுகிறது. இப்புராண செய்தி சங்க நூல்களில் இல்லையாயினும்,

**'கறைமிடற்று அண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல'** - புறம்.பா.55

'பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி' - புறம்.பா.91

என்ற இப்புறநானூற்று வரிகளில் சிவபெருமான் பிறைச் சந்திரனை சூடியுள்ளதைப் பார்க்க முடிகிறது.

முக்கண்ணன்

சிவபெருமானின் இடது கண் முதற் கண்ணாகவும் வலது கண் இரண்டாவது கண்ணாகவும், புருவ மத்தியில் சூட்சுமமாக உள்ள நெற்றிக் கண் மூன்றாவது கண்ணாக குறிப்பிடப்பட்டுள்ளது. "ஞாயிறு, திங்கள், நெருப்பு ஆகிய மூவொளிகளுமே அவனு முக்கண்களாம்" (தருமை ஆதீனக் குரு முதல்வர், சங்க இலக்கியங்களில் சமய நோக்கு, ப.எ.356). என்று சங்க இலக்கியங்களில் சமய நோக்கு முக்கண்ணிற்கு விளக்கம் கூறப்பட்டுள்ளது. மேலும்,

'...................... நின் குடையே, முனிவர்
முக்கட் செல்வர் நகர் வலம் செயற்கே' - புறம்.பா.6

என்ற இப்புறநானூற்று வரிகளை ஆராயுங்கால் முனிவர்கள் வணங்க கூடியவர் மூன்று கண்களைக் கொண்ட சிவபெருமான் என்று பதிவு செய்யப்பட்டுள்ளதைப் பார்க்க முடிகிறது.

மேலும்,

'பிறைநுதல் விளங்கும் ஒரு கண் போல' - புறம்.பா.55

என்ற இவ்வரியில் பாண்டியன் நன்மாறனை புகழ்ந்து பாடும் மருதனிளநாகனார் 'சூடிய பிறை சேர்ந்த நெற்றியில் உள்ள நெற்றிக்கண் போல' பாண்டியன் உள்ளான் என்று விதந்து ஓதியுள்ளார்.

நீலமணி மிடறு

பாற்கடலை கடையும் பொழுது அதிலிருந்து வந்த ஆலகால விஷத்தினை உண்ட சிவபெருமானின் நீல நிறமாக மாறியதால் திருநீலகண்டன் என்று அழைக்கப்படுகின்றார். இத்திருவுருவம் சிவனின் அறுபத்தி நான்கு திருக்கோனங்களில் ஒன்றாகும். நஞ்சு உண்டதால் நீல நிற கண்டனாக காட்சி தரும் ஈசன் உயிர்கள் மீது தான் கொண்ட பெரும் கருணைக்கு அடையாளமாக திகழ்கின்றான். இதைத்தான் வள்ளுவர்,

"பெயக்கண்டு நஞ்சுண்டமைவர் நயத் தக்க
நாகரிகம் வேண்டு பவர்" (அறவாணன்.க.பா., திருக்குறள்.எ.580.)

என்ற குறளிலும் தெளிவுப்படுத்துகிறார். சிவபெருமான் நீலநிற கழுத்தைக் கொண்டவன் என்பதை,

> **'நீலமணி மிடற்று ஒருவன் போல**
> **மன்னுக பெரும்!'** **- புறம்.பா.எ.91**

என்ற நீலநிற கழுத்தைக் கொண்ட சிவபெருமானை போல வாழ்க என்று அதியமானை வாழ்த்தும் அவ்வையாரின் வரிகளிலும் சிவனின் நீலநிற மிடறு வெளிப்படுகிறது.

முடிவுரை

பதினென் மேற்கணக்கு நூல்களுள் எட்டுத்தொகையை சார்ந்த புறநானூறு பண்பாட்டு களஞ்சியம், இலக்கியம் கருவூலம் எனலாம். இந்நூலில் சிவன் என்ற பெயர் இல்லையாயின் சிவனை குறிக்கக்கூடிய முக்கண்ணன், திரிபுரம் எரிந்தவன், நீலகண்டன், பிறை நுதல் சென்னியன், போன்ற பல பெயர்களைத் தன்னுள்ளே சுமந்து நிற்பதால் சைவ சமயம் சங்ககாலத்தில் தோற்றம் பெற்றது என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

தொகுப்புரை

1. வரலாற்று பெட்டகம் என்று அழைக்கப்படும் புறநானூறில் முழு முதற் கடவுளான சிவபெருமானை பெருந்தேவனார் கடவுள் வாழ்த்தாக பாடியுள்ளதை அறியமுடிகிறது.
2. இறைவனுடைய பெயர் சிவபெருமான் என்று குறிப்பிடவில்லையாயினும் திருச்சடையான், முக்கண்டன், நீலமணிமிடற்றன் பொன்ற சிவனின் உருவ அமைப்பை உணர்த்தும் வரிகள் பதிவு செய்யப்படுகின்றன.
3. சிவன் அரக்கனை அழித்த புராண செய்திகளும் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது.

துணைநூற்பட்டியல்

1. அறவாணன் க.ப (உ.ஆ), திருக்குறள், தமிழ்க்கோட்டம், 2, முனிரத்தினம் தெரு, அய்யாவு குடியிறுருப்பு, அமைந்தகரை, சென்னை - 600 029. 2007.
2. கந்தசாமிப்பிள்ளை (ப.ஆ),திருவாசகம், அண்ணமலைப்பல்கலைக் கழகம், சிதம்பரம் - 608002, 1964.
3. தருமை ஆதினக் குரு முதல்வர்,சங்க இலக்கியங்களில் சமய நோக்கு அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்சி நிறுவனம் மயிலாடுதுறை - 609001,1991.

4. பாலசுப்பிரமணியன் குவே (உ.ஆ), புறநானூறு தொகுதி -1,நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்,41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை- 98, 2017.
5. பாலசுப்பிரமணியன் குவே (உ.ஆ),புறநானூறு தொகுதி -2, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை- 98, 2017.
6. https://ta.m.wiktionary.org

REFERENCES

1. Aravanan Ka.Pa (2007), Thirukural, Tamilkottam, 2, Munirathinam Theru, Ayyavu Kudiiruppu, Amanthakarai, Chennai – 29.
2. Kandasamypilai (1964), Thiruvasagam, Annamalai Universtiy, Chidambaram – 608002.
3. Tarumai Athina Guru (1991), Sanga Ilakiyangalil Samiya Nokku, Annaithulaga Shiva Sithantha Research Limted, Mailaduthurai – 609001.
4. Balasubaramaniyan, Purananuru Volume – 1, New Senguriyan Book house Pvt Ltd, SITCO Industrial Estate, Chennai – 98.
5. Balasubaramaniyan, Purananuru Volume – II, New Senguriyan Book house Pvt Ltd, SITCO Industrial Estate, Chennai – 98.
6. https://ta.m.wiktionary.org